# சைவ நெறி

## தரம்

# 3

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

இலவசப் பாடநூல்

**முதலாம் பதிப்பு - 2017**

**பதிப்புரிமையுடையது.**

**கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது.**

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
கருணாரத்ன அன்ட் சன்ஸ்
65C, தள்கஹாவிதூ வீதி, மிடெல்லமுளஹேன, ஹொறன
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

තිළිණය ලෙසින් රජයෙන් මේ පොත ලදිමි
කියවා එයින් නැණ ගුණ එළි කර ගනිමි
මගෙ රට වෙනුවෙන් ම දෑ සම්පත් රකිමි
මේ පොත එන වසරෙ වෙන කෙනකුට පුදමි

அரசின் வெகுமதியாய் நூலிதனைப் பெற்றேன்
அறிவு பெருகிடவே நூலிதனைக் கற்பேன்
தாய் நாட்டின் வளமெனவும் நூலிதனைக் காப்பேன்
பல மாணவரும் பயின்றிடவே நூலிதையே அளிப்பேன்

From the government, I received this as a gift
I’ll read it, light up my knowledge and practise thrift
On my country’s own behalf, I’ll protect the national resources
And offer this book to another one as a fresh garland of roses



***''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''***

**கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி**


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமுகத்தில் காணப்படும் தொழில் வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான பல்வேறு மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமுகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை ஒழுங்காகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்த சகோதரர்களின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே அரசினால் இலவசப் பாடநூல்களை உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

உலகில் மிக வேகமாக மாறி வரும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதற்கும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஓர் அரசாக நாம் செயற்படுவது ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாக புரிந்து வைத்துள்ளோம் என்பதனாலேயாகும். இலவசக் கல்வியின் உச்ச பயனை அனுபவித்துக்கொண்டு நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியது அதனாலேயே ஆகும். இதற்காக இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகவும் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் என்பனவே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் மிகவும் கூடிய பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கூட இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டில் நீங்கள் பிறந்திருக்கின்றீர்கள். உங்கள் நாடு சிறியதாயினும் அது பெறுமதிமிக்க ஒன்றாகும். இவ்வாறான நாடொன்றில் பிறந்திருக்கும் நீங்கள் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். நீங்கள் நன்கு கற்று புத்திக்கூர்மையும் குணநலமும் சக்தியுமிக்க வெற்றிபெற்ற ஒரு பிரஜையாகி இந்நாட்டின் மதிப்பை மேலும் உயர்த்துவதைக் காண்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அவ்வெதிர்பார்ப்பை அடைந்து கொள்ளுவதற்கு கல்வி தொடர்பான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு திட்டமாகவே இந்நூல் உங்களுக்கு வழங்கப்படுகின்றது.

புதிய பாடத்திட்டத்திற்கிணங்க 2016 ஆம் ஆண்டு தரம் 1 இற்கும் 2017 ஆம் ஆண்டு தரம் 2 இற்கும் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் தொடராக 2018 ஆம் ஆண்டு தரம் 3 இற்குப் புதிய பாடநூல்களை வழங்குவதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நூலை உங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் ஒத்துழைப்பு வழங்கிய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாசிரியர்கள் உட்பட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். இந்நூலை உங்கள் கைகளில் கிடைக்கச் செய்வதில் செயற்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கின்றேன். இந்நூலினால் மிக உயர்ந்த பயனைப்பெற்று அதிலுள்ள விடயங்களை உங்கள் வாழ்வில் எடுத்து நடப்பதைக் காண்பதே நூலாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த அனைவரினதும் எனதும் விருப்பம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க**
கல்வி வெளீயீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2017. 05. 02

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**திரு ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**திருமதி டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**திரு சி. காண்டீபன்**
அபிவிருத்தி அலுவலர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**சைவப்புலவர் சு.செல்லத்துரை**
அதிபர் (ஓய்வு)

**கலாநிதி க.இரகுபரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில்.

**கலாநிதி உ.நவரட்ணம்**
பணிப்பாளர் (ஓய்வு)
தமிழ் மொழிப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம், மஹறகம.

**திரு வீ.என்.எஸ்.உதயசந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன் பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம், மஹறகம.

**திருமதி சோ. பாலசுந்தரம்**
பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு)

## நூலாக்கக் குழு

**திருமதி வானதி காண்டீபன்**
முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**செல்வி வாஹினி ஸ்ரீதரன்**
ஆசிரியர்
திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டி.

**பொன்னுத்துரைக் குருக்கள் சிவ சர்மா**
ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்விக் காரியாலயம்
திருக்கோவில்.

**திருமதி காந்திமதி சங்கரநாதன்**
ஆசிரியர்
விபுலாநந்தாக் கல்லூரி
வவுனியா.

## பதிப்பாசிரியர் - மொழி

**திரு எஸ். வடிவேல்**
ஆசிரியர்
இ/ இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி.

## சரவை நோக்கு

**இ.மகேந்திரன்**
ஆசிரியர்
நோவூட் தமிழ் மகா வித்தியாலயம், நோவூட்.

## சித்திரம்

**திரு ஆர்.கௌசிகன்**
பாடசாலை ஒழுங்கை, புகையிரத வீதி தெஹிவளை.

**திரு ச. தர்ம தாஸ்**
விரிவுரையாளர்
ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி
பத்தனை.

# முகப்பு வடிவமைப்பு

**திரு சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திரு ஆர்.கௌசிகன்**

பாடசாலை ஒழுங்கை, புகையிரத வீதி தெஹிவளை.

# நூல் வடிவமைப்பு

**திரு சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | ஆனைமுகன் | 1 |
| 2 | அம்மையப்பர் | 5 |
| 3 | பாற்கடல் ஈந்த பிரான் | 8 |
| 4 | திரு விளக்கு ஏற்றுவோம் | 11 |
| 5 | பெரியோரைப் போற்றுவோம் | 15 |
| 6 | பொள்ளாப்பிள்ளையார் | 22 |
| 7 | தீபாவளி | 26 |

8 திருக்கோணேச்சரம் 30

34 சூரசங்காரம் 9

10 பொன்கட்டிகளாக மாறிய செங்கட்டிகள் 38

42 சிவசின்னங்கள் 11

12 காளிங்க நடனம் 47

51 வெப்புநோய் தீர்த்த சம்பந்தர் 13

14 ஏடு தொடக்கல் 56

| | | |
|---|---|---|
| 15 | உண்ணும்போது ஒரு கைப்பிடி | 60 |
| 16 | நீற்றறையில் நாவுக்கரசர் | 66 |
| 17 | எங்கள் ஆலயம் | 71 |
| 18 | பாடசாலையில் சமயம் | 76 |
| 19 | மக்கள் சேவை | 81 |
| 20 | உண்மை தந்த வாழ்வு | 86 |
| 21 | ஒற்றுமையே பலம் | 91 |
| 22 | உலக நீதி | 96 |

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

திருச்சிற்றம்பலம்

# 1 ஆனைமுகன்



திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

- திருமூலர்

முதல் வணக்கத்திற்கு உரியவர் பிள்ளையார். பிள்ளையாரை வணங்கியே செயல்களை ஆரம்பிப்போம். பிள்ளையார், ஆனைமுகம் உடையவர். அதனால் அவரை ‘ஆனைமுகன்’ என்று அழைப்போம். ஆனை முகனுக்கு துதிக்கையோடு சேர்த்து ஐந்து கரங்கள் உண்டு. அதனால் அவரை ஐங்கரன் என்போம். ஆனைமுகனின் தந்தம் பிறைச்சந்திரன் போன்றது. சிவபெருமானை நந்தி என்றும் அழைப்பர். நந்தியின் மகனான ஆனைமுகனை வணங்குவோம். எங்கள் செயல்கள் யாவும் வெற்றியடையும்.

**ஆனைமுகனை வணங்குவோம்;**

**அவன் அருள் பெறுவோம்.**



## பயிற்சி

**சரியாக இணைப்போம்.**

ஆனைமுகன்



இந்தின் இளம்பிறை



நந்தி



எயிறு



## செயற்பாடு

1. 'ஐந்து கரத்தனை' என்ற பாடலைப் பாடுவோம்.
2. பிள்ளையாரின் திருவுருவம் பற்றிக் கலந்துரையாடுவோம்.



# 2 அம்மையப்பர்



எங்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவர் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; உயிர்களிடத்தில் கருணை உள்ளவர்.

சிவபெருமானின் சக்தியாக உமாதேவியார் விளங்கு கிறார். உமாதேவியாரே உலக மாதா ஆவார். அவர் எம்மை எல்லாம் காக்கின்றார். எங்கள் தந்தையும் தாயுமான சிவபெருமானையும் உமாதேவியாரையும் பக்தியுடன் வழிபடுவோம்.

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி ஆரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

*- சுந்தரமூர்த்தி நாயனார்*

**அம்மையப்பரைத் தொழுவோம்;**

**அவர்கள் அன்பைப் பெறுவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுவோம்.**

சிவபெருமான், உமாதேவியார், கொன்றை, உலகமாதா

1. எங்கள் முழுமுதற் கடவுள் ________________

2. சிவபெருமானின் சக்தியாக ________________ விளங்குகிறார்.

3. உமாதேவியாரே ________________ ஆவார்.

4. சிவனின் தலையில் ________________ மாலை காணப்படுகிறது.

## செயற்பாடு

'பொன்னார் மேனியனே' என்ற தேவாரத்தைக் குழுவாகப் பாடுவோம்.

# 3 பாற்கடல் ஈந்த பிரான்

குழந்தை உபமன்யுவுக்கு மிகுந்த பசி. பசி தாங்காமல் அழத் தொடங்கியது. குழந்தைக்குக் கொடுப்பதற்கு ஆசிரமத்தில் பால் இல்லை. எதைக் கொடுத்தும் அழுகை நிற்கவில்லை. தந்தைக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர் குழந்தையைக் கோயிலுக்கு எடுத்துச் சென்றார். இறைவனுக்கு முன்பாகக் கிடத்தினார். மனமுருகி இறைவனை வழிபட்டார்.



இறைவன் அன்பே வடிவானவர் அல்லவா? பாலுக்கு அழும் பாலகனைக் கண்டு மனம் இரங்கினார். குழந்தைக்காக திருப்பாற்கடலையே அழைத்தார். பசியால் அழுத குழந்தை பாலைக் குடித்தது. பசி நீங்கியதால் அழுகையை நிறுத்தியது. இறையருள் பெற்ற அந்தக் குழந்தையே வளர்ந்து உபமன்யு முனிவர் ஆனது.

இறைவனை ஒருபோதும் மறவாதவராய் உபமன்யு முனிவர் உயர்ந்து விளங்கினார்.

**இறைவன் அன்பே வடிவானவர்;**

**எல்லா உயிர்களுக்கும் அருள் புரிபவர்.**

## பயிற்சி

**இடைவெளி நிரப்புவோம்.**

1. ____________________ பசியால் அழுதது.

2. தந்தையார், குழந்தையை ____________________ எடுத்துச் சென்றார்.

3. பாலுக்கு அழும் பாலகனைக் கண்டு ____________________ இரங்கினார்.

4. இறைவன் குழந்தைக்காக ____________________ அழைத்தார்.

5. குழந்தை வளர்ந்து ____________________ ஆனது.

## செயற்பாடு

'பாற்கடல் ஈந்த பிரான்' என்ற கதையைக் கூறுவோம்.

# 4 திரு விளக்கு ஏற்றுவோம்



சூரியன் உலகுக்கு ஒளியூட்டுகின்றான். ஆனால் மாலையானதும் மறைந்து விடுகின்றான். உலகம் இருண்டு விடுகிறது. இருளைப் போக்குவதற்காக நாம் விளக்கேற்றுகிறோம்.

விளக்குகள் உலகின் புறஇருளைப் போக்குகின்றன. அச்சம் முதலான அக இருளையும் போக்குகின்றன. அதனால் நம் முன்னோர்கள் விளக்கைத் தெய்வாம்சம்

உடையதாகப் போற்றினார்கள். பகல் என்றாலும் தெய்வ வழிபாட்டின்போது அவர்கள் விளக்கேற்றத் தவறுவதில்லை.

விளக்கை இலட்சுமியாகப் போற்றுகின்றோம்; திருவிளக்குப் பூசை செய்து வழிபடுகிறோம். விளக்குக ளோடு தொடர்புபட்ட விழாக்களையும் கொண்டாடு கின்றோம். தீபாவளி, கார்த்திகை விளக்கீடு என்பவை அத்தகையவையாகும்.

திருவிளக்கேற்றும் பணியின் சிறப்பை விளக்கும் கதை ஒன்று உள்ளது:

திருக்கோயில் ஒன்றில் எரிந்து கொண்டிருந்த திருவிளக்கு அணையத் தொடங்கியது. அவ்வேளை அங்கு ஓடித்திரிந்த எலி ஒன்று அந்த விளக்கின் திரியைத் தற்செயலாகத் தூண்டிவிட்டது. அதனால் விளக்கு அணைந்துவிடாமல் தொடர்ந்து எரிந்தது. விளக்கை அணையாமற் காத்த புண்ணியம் எலிக்குக் கிட்டியது. அந்த எலி, மறுபிறப்பில் மனிதனாகப் பிறந்து ‘மகாபலி’ என்ற பெருஞ் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தது.

நமிநந்தியடிகள் சைவ நாயன்மார்களுள் ஒருவர். அவர் திருவிளக்கிடும் திருப்பணி புரிந்தே இறையருள் பெற்றார். நாமும் வீட்டிலும் ஆலயங்களிலும் திருவிளக்கேற்றுவோம்; திருவருள் பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசு நாயனார்

**திருவிளக்கு ஏற்றுவோம்;**
**திருவருள் பெறுவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான விடையை இனங்கண்டு எழுதுவோம்.**

1. விளக்கேற்றுவதன் நோக்கம் ________________

2. திருவிளக்கோடு தொடர்புபட்ட விழா ________________

3. திருவிளக்கிடும் திருப்பணி புரிந்து திருவருள் பெற்ற நாயனார் ________________

4. முற்பிறப்பில் திருவிளக்கைத் தூண்டியதால் சக்கரவர்த்தியானவர் ________________

## செயற்பாடு

வீட்டில் தினமும் விளக்கேற்றுவோம்,
'இல்லக விளக்கது' தேவாரத்தைப் பாடுவோம்.

# 5 பெரியோரைப் போற்றுவோம்



அன்று சனிக்கிழமை. வழமை போலவே ஆரணியும் அகிலனும் அதிகாலையில் எழுந்தனர்; காலைக் கடன்களை முடித்து இறைவனை வணங்கினர்; பாடசாலையில் தரப்பட்ட பயிற்சிகளைச் செய்துமுடித்தனர்; தாத்தா, பாட்டி, பெற்றோருடன் ஒன்றாக அமர்ந்து காலை உணவு உண்டனர்.

ஆரணி வீட்டைக் கூட்டினாள். அம்மா மதிய உணவு தயாரிப்பதில் ஈடுபட்டார். ஆரணியும் உதவி செய்தாள். தைத்துக்கொண்டிருந்த பாட்டி ஆரணியைக் கூப்பிட்டார். பாட்டிக்கு ஆரணி ஊசியில் நூல் கோத்துக் கொடுத்தாள்.



தாத்தா ஆட்டுக்குக் குழை ஒடித்தார். அகிலன் அவற்றை ஆட்டுக்குக் கொடுத்தான். அப்பா தோட்டத்தில் செடி களுக்கு நீர் பாய்ச்சினார். அகிலனும் ஆரணியும் பூப்பறித்தனர். அம்மா, கோயிலுக்குக் கொடுப்பதற்காக மாலை கட்டினார்.

மதியம் ஆனது. அம்மா அனைவரையும் சாப்பிட அழைத்தார். எல்லோரும் கை, கால், முகம் கழுவி


-கௌசிக்

உணவு உண்ண அமர்ந்தனர். அவ்வேளை, வீட்டுக்கு வெளியே ''அம்மா பசிக்கிறது'' என்று ஒரு குரல் கேட்டது. ஆரணியும் அகிலனும் வாசலுக்கு ஓடினர். பசியால் வாடிய முதியவர் ஒருவர் நிற்பதைக் கண்டனர்; வீட்டிற்குள் அவரை அழைத்து வந்தனர். அம்மா, அவருக்கும் உணவு பரிமாறினார். எல்லோரும் இறைவனை வழிபட்டு, உண்ணத் தொடங்கினர்.



திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்

பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை

என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற

இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசு நாயனார்

**பெரியோரைப் போற்றுவோம்;**

**பெருமகிழ்ச்சி அடைவோம்.**



## பயிற்சி

**படத்தைப் பார்த்து வாக்கியம் எழுதுவோம்.**










## செயற்பாடு

1. 'அன்னம் பாலிக்கும்' என்ற தேவாரத்தைப் பாடுவோம்.
2. பெரியோருக்கு நாம் செய்த ஏதாவது ஒரு உதவியைக் கூறுவோம்.



# 6 பொள்ளாப்பிள்ளையார்



நம்பி ஒரு சிறுவன். அவனது தகப்பனார், பிள்ளையார் கோயில் பூசகர். ஒருநாள் தகப்பனார் வெளியூர் சென்றார். அதனால் நம்பியே பிள்ளையாருக்குப் பூசை செய்யச் சென்றான். கோயிலில் விளக்கேற்றினான்; சர்க்கரைப் பொங்கல், அப்பம், மோதகம், பழம் ஆகியவற்றைப் படைத்தான்; தோத்திரம் சொன்னான்; பிள்ளையாரை விழுந்து வணங்கினான்.

‘‘பிள்ளையாரே, சாப்பிடுங்கள்’’ என்று வேண்டினான்; படைத்த உணவுகள் அப்படியே இருப்பதைக் கண்டான்; பூசையில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்று கலங்கினான். நம்பிக்கு அழுகை வந்துவிட்டது. தலையைக் கல்லில் மோதப் போனான். அவனது அன்பை மெச்சிய பிள்ளையார் ‘‘நம்பி, பொறு! பொறு!’’ என்று தடுத்தார்; நம்பி படைத்த உணவை உண்டருளினார். அவரே திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார்.

அந்த நம்பியே நம்பியாண்டார் நம்பி என்று அழைக்கப்படுகிறார். அவரே சைவத் திருமுறைகளைத் தொகுத்துத் தந்த பெருமைக்குரியவர் ஆவார்.

பொள்ளாப்பிள்ளையார் - உளியால் செதுக்கப்படாது இயற்கையாகவே தோன்றிய பிள்ளையார்.

**கடவுள் மீது அன்பு செய்வோம்;**

**அவரின் கருணைக்கு ஆளாவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியை நிரப்புவோம்.**

**சைவத் திருமுறைகளை, பொள்ளாப்பிள்ளையார், பொங்கல், மோதகம், அமுகை, நம்பி**

1. ________________ பிள்ளையாருக்குப் பூசை செய்தான்.

2. அவன் பிள்ளையாருக்குப் ____________, ____________, என்பவற்றைப் படைத்தான்.

3. படைத்த உணவு அப்படியே இருப்பதைக் கண்டு நம்பிக்கு ____________________ வந்தது.

4. திருநாரையூரில் __________________ ஆலயம் உள்ளது.

5. நம்பியாண்டார் நம்பி __________________ தொகுத்தார்.

## செயற்பாடு

நம்பியின் கதையைக் கூறுவோம்.



# 7 தீபாவளி



தீபாவளி என்றால் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். அதிகாலையில் எழுவார்கள்; எண்ணெய் தேய்த்து நீராடுவார்கள்; புத்தாடை அணிவார்கள்; தீபம் ஏற்றி இறைவனை வணங்குவார்கள்; அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களோடு விருந்து உண்பார்கள்; பட்டாசு கொளுத்தி மகிழ்வார்கள்.

தீபாவளியை நாம் ஏன் கொண்டாடுகின்றோம்? அதற்கு ஒரு கதை உண்டு:

நரகாசுரன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் மக்களுக்குப் பல துன்பங்கள் செய்தான். முனிவர்களுடைய தவத்தையும் யாகத்தையும் அழித்தான்.



எல்லோரும் கிருஷ்ண பகவானிடம் சென்று முறையிட்டார்கள். கிருஷ்ண பகவான் மனமிரங்கினார்; நரகாசுரனுடன் பெரும்போர் செய்தார். நரகாசுரன் வீழ்ந்தான்.

இறக்கும் தருணத்தில் நரகாசுரனுக்குப் புத்தி வந்தது. தன்னுடன் போர் செய்தவர் கிருஷ்ண பகவான் என்பதை உணர்ந்தான். ‘‘பகவானே! நான் நல்லவனாக மாறிவிட்டேன்.


இலவசப் பாடநூல்

இந்த நாளை எல்லோரும் தீபமேற்றிக் கொண்டாடட்டும். இதற்கு அருள் புரியுங்கள்'' என்று பணிவுடன் வேண்டினான்.

அந்த நாளே தீபாவளித் திருநாள் ஆனது. ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் நாங்கள் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுகிறோம்.

**தீபங்களை வரிசையாக ஏற்றுவோம்;**
**தீபத் திருநாளைக் கொண்டாடுவோம்.**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. மக்களுக்குத் துன்பம் செய்த அசுரன் யார்?
2. அவன், யாருடைய தவத்தையும் யாகத்தையும் அழித்தான்?
3. அவனை அழித்தவர் யார்?
4. நரகாசுரன் அழிந்த தினத்தில் கொண்டாடப்படும் பண்டிகை எது?

## செயற்பாடு

தீபாவளிப் பண்டிகை பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறுவோம்.



# 8 திருக்கோணேச்சரம்



திருக்கோணமலை நகரில் கடற்கரை ஓரத்தில் உயர்ந்து நிற்கின்றது கோணமாமலை; அதன் மூன்று பக்கங்களிலும் நீலக்கடல்; 'ஓம்' என்று ஒலி செய்யும் அலைகள்; அவை மலைப் பாறைகளில் மோதி வணங்குகின்றன. மறுபக்கம் பசுமையான சோலை; அங்கே நறுமணம் வீசும் மலர்ச் செடிகள்; ஓங்கி வளர்ந்த மரங்கள்.

சோலையிலே துள்ளி விளையாடும் மான்கள்; மரத்துக்கு மரம் தாவும் குரங்குகள்; தோகை விரித்தாடும் மயில்கள் இத்தகைய கோணமாமலை உச்சியிலே அழகிய கோணேசர் கோயில் அமைந்திருக்கின்றது.

அங்கே சுவாமி, அம்பாளுடன் வீற்றிருக்கின்றார். சுவாமிக்குக் கோணேசுவரர் என்றும் அம்பாளுக்கு மாதுமை என்றும் பெயர். தீர்த்தம் பாவநாசம் ஆகும்.

கோணேசப் பெருமானைத் திருஞானசம்பந்தர் போற்றிப் பாடியுள்ளார்.

**கோணேச்சரப் பெருமானை வணங்குவோம்;**

**கோடி புண்ணியம் பெறுவோம்.**

## பயிற்சி

**திருக்கோணேச்சரம் பற்றிய தகவல்களைப் பூரணப்படுத்துவோம்.**




1. இறைவன்

_______________

2. இறைவி

_______________

3. தீர்த்தம்

_______________

4. அமைவிடம்

_______________

5. தேவாரம் பாடியவர்

_______________

## செயற்பாடு

கோணமாமலையின் இயற்கை அழகு பற்றிக் கலந்துரையாடுவோம்.



# 9 சூரசங்காரம்



சூரபத்மன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் நெடுங்காலம் கடும் தவம் செய்தான்; இறைவனிடம் அரிய வரங்களைப் பெற்றான்; அதனால் கர்வம் அடைந்தான்; இறைவனை மறந்தான்; முனிவர்களையும் தேவர்களையும் வருத்தினான்.

தம்மைக் காத்தருளுமாறு முனிவர்களும் தேவர்களும் சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் அவர்களைக் காக்கத் திருவுளங் கொண்டார்.

சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். தீப்பொறிகள் தோன்றின. அவை சரவணப் பொய்கையில் வீழ்ந்து ஆறு குழந்தைகளாக மாறின. அக் குழந்தைகளை உமாதேவியார் அணைத்தார். ஆறு குழந்தைகளும் ஆறு முகம் உடைய ஒரு குழந்தையாக மாறின. அவரே ஆறுமுகன் ஆகிய முருகப்பெருமான் ஆவார்.



சிவபெருமான், சூரபத்மனை அடக்க முருகப் பெருமானை அனுப்பினார். இருவருக்கும் இடையே போர் நிகழ்ந்தது. போரில் சூரபத்மன் தோல்வி அடைந்தான். அவனது ஆணவம் அடங்கியது. முருகப்பெருமான் சூரபத்மனை சேவலாகவும் மயிலாகவும் ஆக்கினார்.

சேவலைத் தன் கொடியாகவும் மயிலைத் தன் வாகனமாகவும் கொண்டருளினார்.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளன்று ஆலயங்களில் சூரசங்காரம் பெருவிழாவாக நடைபெறுகிறது.

**நன்றி மறவோம்; நல்லது செய்வோம்.**



## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்**

1. இறைவனிடம் அரிய வரங்களைப் பெற்றவன் யார்?
2. அவன் யாரை வருத்தினான்?
3. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்பொறிகள் எங்கே விழுந்தன?
4. தீப்பொறிகளில் இருந்து தோன்றிய குழந்தை யார்?
5. முருகப்பெருமானின் கொடி எது? வாகனம் எது?

## செயற்பாடு

சூரசங்காரக் கதையை வகுப்பறையில் நடிப்போம்.

# 10 பொன்கட்டிகளாக மாறிய செங்கட்டிகள்



சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமான்மீது பக்தி கொண்டவர்; சிவபெருமானைத் தோழராகக் கருதி வழிபட்டு வந்தார். சிவபெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவைகளை எல்லாம் நிறைவேற்றி வந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரைத் திருமணம் செய்தார். இருவரும் திருவாரூரில் வாழ்ந்துவந்தனர்;

திருவாரூர்க் கோயிலுக்குத் தொண்டு செய்வதில் இன்பம் கண்டனர்; சிவனடியார்களை உபசரிப்பதைத் தமது கடமையாகக் கொண்டனர்.

திருவாரூரில் பங்குனி உத்தரத் திருவிழா நடைபெற இருந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவிழாச் செலவுக்குப் பொன் இல்லையே என்று வருந்தினார். மனச் சோர்வுடன் கோயில் மடத்தில் அமர்ந்தார். அங்கிருந்த செங்கட்டிகளின்மேல் தலை வைத்து உறங்கினார். சிவபெருமான் எல்லாம் அறிந்தவரல்லவா? தனது தோழரின் மனக்குறையை அறிந்து கொண்டார். அவருக்கு உதவி புரிய எண்ணினார்.

கண்விழித்த சுந்தரர் செங்கட்டிகள் யாவும் பொன்கட்டிகளாக மாறியிருப்பதைக் கண்டார்; ஆனந்தக் கண்ணீர் வடித்தார்; இறைவனது திருவருளை எண்ணி எண்ணி மனமுருகினார்; ‘தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்’ எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்; பங்குனி உத்தரப் பெருவிழாவைச் சிறப்பாக நடத்தினார்.

**இறைவன் எல்லாம் அறிந்தவர்;**
**எம் குறை தீர்ப்பவர்.**



## பயிற்சி

### இடைவெளி நிரப்புவோம்

1. சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானை ______________ கருதி வழிபட்டு வந்தார்.

2. சுந்தரமூர்த்தி நாயனாரும் பரவையாரும் ______________ உபசரித்து வந்தனர்.

3. சுந்தரர் ______________ திருவிழாவுக்குப் பொன் இல்லையே என்று வருந்தினார்.

4. சிவபெருமான் ______________ பொன்கட்டிகளாக மாற்றி அருளினார்.

5. ______________ 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

### செயற்பாடு

இறைவன், அடியார்களுக்கு அருள் புரிந்த அருட்செயல்களுள் ஒன்றைக் கூறுவோம்.

# 11 சிவசின்னங்கள்



சிவபெருமானைக் குறிக்கும் அடையாளங்கள் 'சிவசின்னங்கள்' எனப்படும். அவை திருநீறு, உருத்திராக்கம் என்பன ஆகும். சிவசின்னங்களை அணிவது சைவர்களாகிய எமக்கு அடையாளம் ஆகும். சிவ சின்னங்கள் தீமைகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றன. அவை, இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்களாக விளங்குகின்றன.

எமது சமய குரவர்கள் சிவசின்னங்களின் பெருமையைப் போற்றிப் பாடியுள்ளனர்.

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்

பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை

ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

*- மாணிக்கவாசக சுவாமிகள்*

## திருநீறு



குற்றமற்ற பசுவின் சாணத்தை உலர்த்தி நெருப்பிலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும்.

வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று, வலது கையின் நடு மூன்று விரல்களால், கீழே சிந்தாமல், திருநீற்றை நெற்றியில் அணிய வேண்டும். திருநீற்றை அணியும்போது 'சிவ சிவ' என மனதால் இறைவனைத் தியானித்தல் வேண்டும்.

## உருத்திராக்கம்

உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். உயிர்களின் துன்பம் கண்டு இறைவன் சிந்திய கண்ணீரின் அடையாளமாக உருத்திராக்கம் விளங்குகிறது. உருத்திராக்க மரத்திலிருந்து பெறப்படும் விதையே உருத்திராக்கம் ஆகும்.



உருத்திராக்கம், போற்றி அணியவேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கிறது.

ஒரு மணியையோ பல மணிகளை மாலையாகக் கோத்தோ அணிந்து கொள்ளலாம். உருத்திராக்க மணிகளாலான செபமாலை தியானம் செய்வதற்கு உகந்த சாதனமாகும்.

## சிவ சின்னங்களை அணிவோம்;
## சிவனருள் பெறுவோம்

### பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. சிவ சின்னங்கள் என்றால் என்ன?

2. சிவ சின்னங்கள் யாவை?


3. சிவசின்னங்கள் அணிவதால் உண்டாகும் நன்மைகள் எவை?

4. திருநீறு எவ்வாறு பெறப்படுகிறது?

5. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?

## செயற்பாடு

சிவசின்னங்களை அணிவோம்.



# 12 காளிங்க நடனம்

யமுனை நீண்ட ஒரு நதி. அதன் சில பகுதிகள் மிகவும் ஆழமானவை. அத்தகைய ஆழமான ஒரு பகுதியில் ஐந்து தலைகள் கொண்ட பாம்பு ஒன்று இருந்தது. அது கொடிய நச்சுப் பாம்பு. அதற்குக் காளிங்கன் என்று பெயர்.

யமுனைக்கு வருபவர்களுக்கு இந்தக் காளிங்கன் மிகுந்த தொல்லை கொடுத்து வந்தது. நீரருந்த வந்த பறவைகளும், விலங்குகளும் காளிங்கனின் நஞ்சினால் இறந்தன. அருகில் இருந்த புல், பூண்டுகள், மரம், செடி, கொடிகளும் கருகிப் போயின.

அந்த நதிக்கரையில் ஒரு கடம்ப மரம் நின்றது. அதன் இலைகளெல்லாம் காளிங்கனின் நஞ்சினால் எரிந்து போயின. மாடு, கன்று மேய்த்துக் கொண்டிருந்த கண்ணன் அதை அவதானித்தான்; அந்தக் காளிங்கனின் பொல்லாத்தனத்தை அடக்க வேண்டும் என்று நினைத்தான்; அந்தக் கடம்ப மரத்தின் மேல் ஏறினான்.



நச்சுப் பாம்பு மீதிலே நடனமாடும் கண்ணனாம்

கண்ணன் காளிங்கனின் வாலைப் பிடித்து இழுத்தான்; காளிங்கனின் தலையின்மேல் ஏறி நின்று ஆடத் தொடங்கினான்.

காளிங்கனின் படம் ஒடுங்கியது. அதன் தலையில் இருந்த இரத்தினங்கள் சிதறி விழுந்தன. காளிங்கனின் வலிமை ஒழிந்தது; நஞ்சு அழிந்தது; கர்வம் அடங்கிற்று.

அன்றிலிருந்து காளிங்கனால் ஏற்பட்ட தொல்லை ஒழிந்தது. மக்கள் மகிழ்ந்தனர். பறவைகளும் விலங்குகளும் அங்கே அச்சமின்றி நீரருந்தின. பழையபடி பசுமை ஏற்பட்டது.

**கண்ணனைப் போற்றுவோம்,**

**கவலைகள் போக்குவோம்.**

## பயிற்சி


**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (✗) எனவும் அடையாளம் இடுவோம்.**

1. யமுனை நதியில் நச்சுப்பாம்பு இருந்தது.
2. நதியில் இருந்த பாம்பின் பெயர் காளிங்கன் ஆகும்.
3. வேப்பமரத்தின் மீது கண்ணன் ஏறினான்.
4. கண்ணன் காளிங்கன் தலையில் நடனம் ஆடினான்.
5. காளிங்கனின் தொல்லை நீங்கியதால் மக்கள் துன்பமுற்றனர்.

## செயற்பாடு

'காளிங்க நடனம் ' கதையை நாடகமாக நடிப்போம்.

# 13 வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்



பாண்டிய மன்னன் நெடுமாறன், சைவசமயத்தில் இருந்து சமண சமயத்தில் சேர்ந்தான். குடிமக்களும் அவன் வழியில் சமணசமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவசமயிகளாக வாழ்ந்துவந்தனர். பாண்டிய மன்னன் சமணனானது கண்டு பாண்டிமாதேவி கவலை அடைந்தார்.

அவர் திருஞானசம்பந்தரைப் பாண்டி நாட்டுக்கு அழைத்தார். சைவத்தை மீண்டும் தழைக்கச் செய்யுமாறு வேண்டினார். அமைச்சர் குலச்சிறையார், சம்பந்தரையும் அடியவர்களையும் திருமடம் ஒன்றில் தங்க வைத்தார்.

சம்பந்தப் பெருமானின் வருகையை அறிந்த சமணர்கள் கலக்கம் அடைந்தனர்; அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர்.

சமணர்கள் செயலாயினும் அரசனின் கட்டளைப் படிதானே அவர்கள் தீ வைத்தனர் என்று சம்பந்தர் நினைத்தார். அதனால் தீயின் வெம்மை 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடினார்.

தீயின் வெம்மை பாண்டியனை அடைந்தது. அவன் வெப்பு நோயால் வருந்தினான். சமணர்கள் மந்திரம் சொல்லி மயிற்பீலியால் தடவினர். நோயோ அதிகரித்தது.

பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் ஞானசம்பந்தரை அரண்மனைக்கு அழைத்து வந்தனர். சம்பந்தர், பாண்டியனின் உடலில் திருநீற்றைப் பூசினார்; 'மந்திரமாவது நீறு' எனும் பதிகம் பாடினார். பாண்டியனின் வெப்பு நோய் ஒழிந்தது.

அவன் சம்பந்தரை வணங்கினான்; 'சைவசமயமே உண்மைச் சமயம்' என்று உணர்ந்து கொண்டான்; மீண்டும் சைவனானான்; பாண்டிநாடு சைவத்தால் தழைத்தோங்குமாறு தொண்டாற்றினான்.

**மேன்மை கொள் சைவநீதி**

**விளங்குக உலகமெல்லாம்!**



## பயிற்சி

**சரியான விடையின்கீழ்க் கோடிடுவோம்.**

1. மங்கையர்க்கரசியார் கவலையுற்றமைக்கான காரணம்.

   அ) பாண்டியன் சமணனானமை

   ஆ) பாண்டியன் சைவனானமை

2. திருஞானசம்பந்தரைப் பாண்டி நாட்டுக்கு அழைத்தவர்.

   அ) பாண்டிமாதேவி ஆ) பாண்டியமன்னன்

3. சம்பந்தரின் வருகையால் கலக்கமடைந்தவர்கள்.

   அ) மக்கள் ஆ) சமணர்கள்

4. ‘பையவே சென்று பாண்டியற்காகவே’ என்று பாடியவர்.

   அ) திருஞானசம்பந்தர் ஆ) குலச் சிறையார்

5. பாண்டியனின் வெப்புநோயைத் தணித்தது.

   அ) மயிற்பீலி ஆ) திருநீறு

## செயற்பாடு

‘வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்’ கதையை நாடகமாக நடிப்போம்.

# 14 ஏடு தொடக்கல்

நவராத்திரி, சக்தி விரதங்களுள் ஒன்று. அது புரட்டாதி மாதத்தில் ஒன்பது நாட்கள் அனுட்டிக்கப்படுகிறது. வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகளில் அது விழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

நவராத்திரியின் ஒன்பது நாட்களும் சக்தியை, துர்க்கையாகவும் இலக்குமியாகவும் சரஸ்வதியாகவும் வழிபடுவோம். பத்தாம் நாள் விஜயதசமியைக் கொண்டாடுவோம்.



விஜயதசமி வெற்றிக்குரிய தினம். அன்று ஆரம்பிக் கப்படும் எச்செயலும் வெற்றிகரமாக நிறைவேறும். அதனால் அன்று சிறுவர்களுக்கு ஏடு தொடக்குவார்கள். ஒரு பிள்ளை முதன் முதலாக எழுதக் கற்க ஆரம்பிப்பதை ‘ஏடு தொடக்கல்’ அல்லது ‘வித்தியாரம்பம்’ என அழைப்பர்.

நவராத்திரியின்போது வைக்கப்பட்ட கும்பத்தின் முன்னால், ஒரு தட்டத்திலே அரிசியைப் பரப்பி வைப்பார்கள். அதன்மேல் ஏட்டை வைப்பார்கள். தேங்காய் உடைத்து தீபம் காட்டி வழிபடுவார்கள். ஏடு தொடக்கும் பெரியவர், இறைவனை வணங்கி, பிள்ளைக்கு எழுத்துக்களை உச்சரிக்கச் சொல்லிக் கொடுப்பார். எழுத்துக்களை, தட்டத்திலே பரப்பிய அரிசியில் எழுத வைப்பார்.

ஏடு தொடக்குபவர் பெற்றோராக, குடும்பத்தில் மூத்தவராக, குருவாக இருக்கலாம். அவர்கள் குழந்தை மீது அன்பும் அக்கறையும் கொண்டு ஏடு தொடக்குவார்கள்.

எல்லோருக்கும் உயர்வைத் தரவல்லது கல்வி. அது சிறப்புற அமைவதற்கு அத்திவாரமாக ஏடு தொடக்கல் அமைகிறது.

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படும் இடங்கள்.

   1. ____________________
   2 ____________________
   3. ____________________

2. நவராத்திரியின் போது வழிபடப்படும் தெய்வங்கள்.

   1. ____________________
   2. ____________________
   3. ____________________

3. ஏடு தொடக்கக் கூடியவர்கள்.

   1. ____________________
   2. ____________________
   3. ____________________

**விஜயதசமியில் ஏடு தொடக்குவோம்;**

**வாழ்வில் வெற்றி பெறுவோம்.**

## செயற்பாடு

ஏடு தொடக்குவதை அவதானிப்போம்; அது பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுவோம்.



# 15 உண்ணும்போது ஒரு கைப்பிடி



விடுமுறை நாளில் ஆரணியும் அகிலனும் மாமாவின் ஊரான மன்னாருக்கு வந்தனர். மாமாவின் பிள்ளைகளோடு விளையாடி மகிழ்ந்தனர். ‘‘நாளை நாமெல்லோரும் திருக்கேதீச்சரம் போவோம்’’ என்றார் மாமா.

அடுத்தநாள் அதிகாலையில் அனைவரும் திருக்கேதீச் சரத்தை அடைந்தனர். பாலாவித் தீர்த்தத்தில் நீராடினர். அன்று திருஞானசம்பந்தரின் குருபூசைத் தினம். அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கோயில் மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

பூசை ஆரம்பமானது. எல்லோரும் கௌரி அம்பாள் சமேத கேதீச்சரப் பெருமானை வணங்கினர்; பஜனையிலும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் திருஞானசம்பந்தர் மடத்தில் அன்னதானம் வழங்க மாமா ஒழுங்கு செய்திருந்தார். அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் மடத்திற்கு வரிசையாகச் சென்றனர்; கை கழுவியபின் மடத்தினுள் வரிசையாக அமர்ந்தனர்.

சம்பந்தர் குருபூசை நிறைவு பெற்றதும் அன்னதானம் ஆரம்பமானது. தொண்டர்கள் உணவு பரிமாறினர். அகிலனும் ஆரணியும் மாமாவின் பிள்ளைகளுடன் சேர்ந்து தொண்டர்களுக்கு உதவி செய்தனர். எல்லோரும் 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற தேவாரத்தைப் பாடினர்; உண்ணுமுன் தம் உணவில் சிறுபகுதியை

உருண்டையாக உருட்டி இலையின் ஒரு மூலையில் வைத்தனர்.

ஆரணியும் அகிலனும் அவர்களின் செயலை வியப்புடன் அவதானித்தனர்; மாமாவிடம் விளக்கம் கேட்டனர். ''அமைதியாக அவதானியுங்கள்'' என்று மாமா சிரித்தபடி கூறினார்.

மாணவர்கள் யாவரும் உணவருந்தியபின் உணவு உருண்டையுடன் தோட்டத்திற்குச் சென்றனர். அவர்களைக் கண்டதும் பறவைகள், அணில் முதலான பிராணிகள் விரைந்து வந்தன. பிள்ளைகள் தமது உணவு உருண்டைகளை அவற்றுக்கு வைத்தனர்.

ஆரணியும் அகிலனும் அவை உண்ணும் அழகினைப் பார்த்து இரசித்தனர். ''நாங்களும் உணவு உண்ணும் போது பிராணிகளுக்கு ஒரு பங்கை உண்ணக் கொடுப்போம்'' என்று இருவரும் மாமாவிடம் கூறினர்.

''பிராணிகளை நாம் பாதுகாக்க வேண்டும். அவற்றின் மீது அன்பு செலுத்த வேண்டும்'' என்றான் அகிலன்.

மாமா ஆரணியையும் அகிலனையும் பாராட்டினார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி.**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு முழு வாக்கியத்தில் விடை எழுதுவோம்.**

1. எல்லோரும் எந்தக் கோயிலுக்கு சென்றனர்?

_______________________________________________

2. அந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவன், இறைவியின் திருநாமங்கள் எவை? _______________________________

3. அன்று யாருடைய குருபூசை தினம் கொண்டாடப்பட்டது?

_______________________________________________

4. மாணவர்கள் ஏன் தோட்டத்திற்குச் சென்றனர்?

_______________________________________________

5. ஆரணியும் அகிலனும் எதனை வியப்புடன் அவதானித்தனர்? _______________________________

## செயற்பாடு

உணவுத்தட்டு தயாரிப்போம்; பிராணிகளுக்கு உணவு இடுவோம்.



# 16 நீற்றறையில் நாவுக்கரசர்

மருணீக்கியார் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்டார். அவர் தமது தமக்கையார் திலகவதி யாரோடு வாழ்ந்து வந்தார்.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் சமண சமயம் மேலோங்கியிருந்தது. மருணீக்கியாரும் சமண சமயத்தைச் சார்ந்தார். தம்பியார் சமண சமயத்தில் சேர்ந்தது கண்டு திலகவதியார் மிகவும் மனம் வருந்தினார்; இறைவனிடம் முறையிட்டார்.



இறைவன் திலகவதியாரின் துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டார். மருணீக்கியாருக்குச் சூலைநோய் ஏற்பட்டது. மருணீக்கியார் நோயால் துடிதுடித்தார்.

சமணர்களால் நோயைத் தீர்க்க முடியவில்லை. மாறாக அதிகரித்தது. வலி தாங்க முடியாத மருணீக்கியார் இரவோடிரவாகத் தமக்கையாரிடம் ஓடோடி வந்தார்.

திலகவதியார் திருவதிகை வீரட்டானேஸ்வரம் கோயிலுக்கு மருணீக்கியாரை அழைத்துச் சென்றார்; திருவைந்தெழுத்தை ஓதி விபூதியைக் கொடுத்தார். மருணீக்கியார் அதனை உடலெங்கும் பூசினார்; இறைவனை மனமுருகி வழிபட்டார்; ''கூற்றாயினவாறு...'' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். சூலைநோய் நீங்கியது.

சைவசமயமே மெய்ச்சமயம் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். மீண்டும் சைவசமயி ஆனார். திலகவதியார் மகிழ்ந்தார். மருணீக்கியார் இறைவனது புகழைப் போற்றிப் பாடினார். அவரது பாடுந்திறனால் நாவுக்கரசர் என அழைக்கப்படலானார்.

நடந்தவற்றைச் சமணர்கள் அறிந்தனர்; கோபங் கொண்டனர்; அரசனிடம் முறையிட்டனர். நாவுக்கரசரைத் தண்டிக்குமாறு அரசன் கட்டளையிட்டான்.

சமணர்கள் நாவுக்கரசரை நீற்றறையில் அடைத்தனர். நீற்றறை தாங்க முடியாத வெப்பம் உடையது. நாவுக்கரசர் இறைவனை நினைந்தார்.

அந்த அறையில் இருப்பது, தென்றல் வீசும் பொய்கையின் அருகில் இருப்பதைப் போன்று குளிர்மையாக இருந்தது. இறைவன் அருளை நினைந்து நாவுக்கரசர் வியந்தார். ''மாசில் வீணையும்...'' எனத் தொடங்கும் திருப்பதித்தைப் பாடி வழிபட்டார்.

**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.**

## பயிற்சி

**சரியான சொற்களை வைத்து கதையைப் பூர்த்தி செய்வோம்.**

**திருவைந்தெழுத்து,மாசில்வீணையும், திலகவதியாரோடு, நீற்றறையில், சமணசமயத்திற்கு, மருணீக்கியார், சூலை, கோபம்**

1. மருணீக்கியார், தமக்கையார் __________________ வாழ்ந்து வந்தார்.

2. சைவசமயத்தை விட்டு __________________ மாறினார்.

3. இறைவன் மருணீக்கியாரை __________________ நோய் கொடுத்து ஆட்கொண்டார்.

4. வலி தாங்கமுடியாத __________________ தமக்கையாரிடம் வந்தார்.

5. __________________ ஓதி, விபூதி பூசி, தேவாரம் பாட, அவரது நோய் குணமானது.

6. சமண அரசன் மருணீக்கியார்மீது __________________ கொண்டான்.

7. நாவுக்கரசரை ______________________ அடைத்தான்.

8. அவர் ______________________ என்ற தேவாரப் பதிகத்தைப் பாடினார்.

## செயற்பாடு

'நீற்றறையில் நாவுக்கரசர்' கதையை நாடகமாக நடிப்போம்.



# 17 எங்கள் ஆலயம்



அன்று ஒரு சனிக்கிழமை. விநாயகபுரம் வித்தக விநாயகர் ஆலயத்தின் பிரதமகுரு, ஊர்ச்சிறுவர்களை ஆலய முன்மண்டபத்திற்கு அழைத்திருந்தார். ஆரணி, அகிலன்

ஆகியோரின் மாமா அங்கு வந்திருந்தார். இன்னும் இரு தினங்களில் திருவிழா ஆரம்பிக்கவுள்ளது. ஆலயத்தில் செய்ய வேண்டிய தொண்டுகள் பல காத்திருந்தன.

மாமா சிறுவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தார். குழுக்களுக்குரிய பணிகளை மாமா கூறினார். சிறுவர்கள் ஆலயத்தொண்டு செய்து பழக்கப்பட்டவர்கள்; ஆலயத்தில் தொண்டு செய்வதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள்.



அமுதாவின் குழுவில் சிலர் ஆலயத்தைக் கூட்டிச் சுத்தம் செய்தனர்; சிலர் ஆலயத்தைக் கழுவினர். கபிலன் குழுவினர் புல், பூண்டுகளை அகற்றினர்; பூந்தோட்டத்தைத் துப்புரவு செய்தனர்; பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றினர். ஆரணி குழுவினர் திருவிளக்குகளைச் சுத்தம் செய்தனர்; பாத்திரங்களைக் கழுவினர்.

அனைவரும் தத்தம் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். குருக்கள் ஐயாவும் மாமாவும் அவர்களை வழிப்படுத்தினர்.



தத்தம் வேலைகளை முடித்த பின்னர், சிறுவர்கள் சிலர் பூப்பறித்தனர். சிலர் தோரணம் கட்டினர். சிலர் பூசைக்கு வேண்டிய மாவிலை, தேங்காய், வாழையிலை, பூக்கள், எண்ணெய், முதலானவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு உதவி செய்தனர்.

அன்றைய மதியநேரப் பூசை ஆரம்பமானது. அமிர்தன் காண்டாமணியை ஒலிக்கச் செய்தான். காந்தன் கொத்துமணியை அடித்தான். அனைவரும் அமைதியாக வழிபட்டனர்; பண்ணோடு தேவாரம் பாடினர்; வரிசையில் நின்று பிரசாதம் பெற்றனர்.

சிறுவர்கள் அனைவரும் குருக்கள் ஐயாவை வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர். மாமா சிறுவர்களைப் பாராட்டி வழியனுப்பினார். அனைவரும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினர்.

**ஆலயப் பணியில் அனைவரும் இணைவோம்.**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. சிறுவர்கள் விநாயகபுரம் வித்தக விநாயகர் ஆலயத்திற்குச் சென்ற காரணம் யாது?
2. அமுதா குழுவினர் செய்த தொண்டுகள் யாவை?
3. பூந்தோட்டத்தைத் துப்புரவு செய்யும் பணிகளில் யாருடைய குழு ஈடுபட்டது?
4. ஆரணி குழுவினர் செய்த பணிகள் யாவை?
5. சிறுவர்கள் யாவரும் ஒன்றாகக் கூடி என்ன செய்தனர்?

## செயற்பாடு

உங்கள் ஊர் ஆலயத்தில் நீங்கள் செய்த தொண்டுகள் பற்றிக் கூறுங்கள்.

# 18 பாடசாலையில் சமயம்

அது ஒரு புதன்கிழமை. அன்று பாடசாலைக் காலைப் பிரார்த்தனையில் தேவாரம் பாடும் பொறுப்பு ஆரணியினுடையது.



வழக்கத்திற்கு முன்பாகவே ஆரணி நித்திரை விட்டு எழுந்தாள்; காலைக்கடன்களை விரைந்து முடித்தாள்; பாடசாலைக்குச் சென்றாள்.

பாடசாலை ஆரம்பமாவதற்கான மணி ஒலித்தது. காலைப் பிரார்த்தனைக்காக அனைத்து மாணவரும்

மண்டபத்தில் ஒன்று கூடினர். ஆரணி ஒலிவாங்கிக்கு முன்னால் வந்தாள்; கைகளைக் கூப்பி வணங்கினாள்; இனிய குரலில் பண்ணோடு பாடத்தொடங்கினாள். முதலில் திருஞானசம்பந்தர் தேவாரம் ஒன்றையும் பின் பெரிய புராணப்பாடல் ஒன்றையும் பாடினாள்.

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்து அழுத
சீதவள வயற் புகலி திருஞானசம்பந்தன்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருச்சிற்றம்பலம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் மனமுருகி இறைவனை வழிபட்டனர். அதிபர் நற்சிந்தனை கூறினார். பின்னர் மாணவர்கள் வரிசையாக வகுப்பறைகளுக்குச் சென்றனர்.

முதலாம் பாடவேளை சுற்றாடல் பாடம். ஆசிரியர் ஆரணியின் வகுப்பு மாணவர்களைப் பாடசாலைப் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு துளசி, செவ்வரத்தை, மல்லிகை, நந்தியா வட்டை, அலரி போன்ற செடி கொடிகள் காணப்பட்டன. செடி கொடிகளுக்கு மாணவர்கள் நீர் ஊற்றினர்; பூக்களைக் கொய்து, பாடசாலைக் கோயிலுக்குக் கொடுத்தனர்; காய்ந்த இலைகுழைகளைக் கூட்டி அள்ளி, கூட்டுப்பசளை தயாரிக்கும் கிடங்கில் கொட்டினர்.

இரண்டாம் பாடவேளைக்கான மணி ஒலித்தது. கைகளை நன்கு கழுவியபின் மகிழ்வுடன் வகுப்பறைக்குச் சென்றனர்.

**இயற்கையைப் பேணுவோம்;**

**இயற்கையுடன் இணைந்து வாழ்வோம்.**

## பயிற்சி

### 1. சரியாக இணைப்போம்.

| | |
|---|---|
| 1. தேவாரம் | கூட்டுப்பசளை |
| 2. பெரிய புராணம் | பூஞ்செடி |
| 3. செவ்வரத்தை | திருஞானசம்பந்தர் |
| 4. இலைகுழை | சேக்கிழார் |

### 2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. தேவாரம் பாட முன்னரும் பாடி முடித்த பின்னரும் கூற வேண்டியது எது?

2. காதலாகி என்ற தேவாரத்தைப் பாடியவர் யார்?

3. காலைப் பிரார்த்தனையுடன் பாடசாலை ஆரம்பமாவது ஏன்?

## செயற்பாடு

தேவாரம், புராணம் ஆகியவற்றைக் குழுவாகப் பாடுவோம்.



# 19 மக்கள் சேவை

(ஆரணியும் அகிலனும் பாடசாலை செல்லத் தயாராகின்றனர்)

அம்மா : ஆரணி! இந்தப் பாலைப் பிள்ளையார் கோயிலில் கொடுத்து விட்டுச் செல்.

ஆரணி : தாருங்கள் அம்மா. அப்பா கொழும்பில் இருந்து எப்போ வருவார் அம்மா?

அம்மா : இன்று மாலை வந்து விடுவார்.

ஆரணி : அம்மா, நாம் சென்று வருகிறோம்.

அம்மா : நல்லது, கவனமாகப் போய் வாருங்கள்.

ஆரணி
அகிலன் : சரி, அம்மா.

(இருவரும் பாடசாலைக்குச் செல்கின்றனர். வழியில், குழந்தையுடன் ஓர் பெண்ணைக் காண்கின்றனர்.



**பெண்** : அம்மா, தாயே! குழந்தை பசியால் அழுகிறது. சாப்பிட ஏதாவது இருந்தால் தாருங்கள்.

**ஆரணி** : அண்ணா! இவர்களைப் பார்க்க மிகவும் பாவமாக இருக்கிறது. இந்தப் பாலைக் கொடுப்போமா?

**அகிலன்** : வேண்டாம் ஆரணி, அம்மா ஏசுவார். இது கோயிலுக்கான பால்.

**ஆரணி** : நான் அம்மாவிடம் சொல்கிறேன் அண்ணா. இந்தாருங்கள் அம்மா பால்.

**பெண்** : நீ நல்லாய் இருப்பாய் தாயே.

(இருவரும் வீதிக்கடவைக்கு வருகின்றனர். கண் தெரியாத பெரியவர் ஒருவர் உதவி வேண்டி நிற்கின்றார்)

அகிலன் : ஆரணி, பாவம் அந்த முதியவர். அவருக்கு உதவி செய்ய வேண்டும்.

ஆரணி : ஆமாம், ஆமாம்,

அகிலன் : வாருங்கள் ஐயா, வீதியின் மறுபுறம் உங்களை விட்டு விடுகிறோம்.

(இருவரும் அவரது கையைப் பிடித்து வீதியைக் கடக்க உதவி செய்கின்றனர்.)

பெரியவர் : நன்றி பிள்ளைகளே! நீங்கள் நல்லாய் இருப்பீர்கள்.

(இருவரும் பாடசாலை விட்டதும் வீடு திரும்புகின்றனர்.)

அகிலன் : ஆ...! அப்பா வந்து விட்டார்.

அம்மா : ஆரணி! கோயிலுக்கான பால் வரவில்லை என்று குருக்கள் ஐயா கூறினார். என்ன நடந்தது?

அகிலன் : நான் வேண்டாம் என்று தான் சொன்னேன். ஆரணிதான்...

(ஆரணி நடந்ததைக் கூறினாள். கண் தெரியாத பெரியவருக்கு அகிலன் உதவியதையும் கூறினாள்)

அம்மா : பிள்ளைகளே! நல்ல காரியம் செய்தீர்கள். உங்களால் எங்களுக்குத்தான் பெருமை. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை நாங்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது.

அப்பா : ஓம். திருமூலரும் இதைத்தான் சொல்லுகிறார்.
"நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"

**மக்கள் சேவையே மகேசன் சேவை**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்**

1. கோயிலுக்குக் கொண்டு சென்ற பாலை ஆரணி என்ன செய்தாள்?
2. ஆரணியின் செயல் சரியா? தவறா? காரணம் தருக.
3. அகிலன் முதியவருக்கு எவ்வாறு உதவினான்?
4. பெற்றோர், ஆரணியையும் அகிலனையும் ஏன் பாராட்டினர்?

## செயற்பாடு

பிறருக்கு உதவி செய்த ஒவ்வோர் சந்தர்ப்பத்தைக் கூறுவோம்.

# 20 உண்மை தந்த வாழ்வு



ஒரு ஊரில் ஒருவன் பொய்கூறுதல், களவு எடுத்தல், மற்றவரைத் துன்புறுத்தல் போன்ற பல பாவகாரியங்களைச் செய்து வந்தான். பெரியவர் ஒருவர், அவனுக்குப் பலவாறு புத்திமதி கூறிப்பார்த்தார். அவன் திருந்தவில்லை. இறுதியில் ஏதாவது ஒரு பாவச் செயலைக் கைவிட ஒத்துக்கொண்டான். பொய் கூறுதலை செய்யாது விடுவதாகச் சத்தியம் செய்தான்.

அவன், ஒரு நாள் இரவு அரண்மனையில் திருடச் சென்றான். நகர சோதனைக்காக மாறுவேடம் பூண்டு வந்த அரசன் அவனைக் கண்டுவிட்டான். ‘‘நீ எதற்காக இங்கே வந்தாய்?’’ என அரசன் கேட்டான். ‘‘அரண்மனையில் திருட வந்தேன்’’ என்று அவன் கூறினான். அவன் உண்மை பேசியதைக் கண்ட அரசன், ஆச்சரியம் அடைந்தான். திருடனின் செயல் முழுவதையும் பார்க்க எண்ணினான். ‘‘நானும் இங்கு திருடவே வந்தேன்; எனக்கும் பாதி கொடு’’ என்றான் மாறுவேடத்தில் இருந்த அரசன்.

திருடன் அதற்கு உடன்பட்டான்; அரண்மனைக்குள்ளே சென்றான்; பெட்டியொன்றைக் கண்டான். அதனுள் மூன்று இரத்தினங்கள் காணப்பட்டன. ‘‘மூன்று இரத்தினக் கற்களைப் சரிசமனாகப் பிரிக்க முடியாதே’’ என்று எண்ணினான். ஒன்றைப் பெட்டியில் வைத்து விட்டு, இரண்டு இரத்தினக் கற்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்; அரசனுக்கு ஒன்றைக் கொடுத்தான்; மற்றையதைத் தான் எடுத்துக்கொண்டான். மாறுவேடம் பூண்ட அரசன், திருடனின் பெயர், ஊர் என்பவற்றைக் கேட்டு அறிந்து கொண்டான்.

பின், அரசன் அரண்மனைக்குள் சென்று பெட்டியைத் திறந்து பார்த்தான். அங்கே ஓர் இரத்தினம் எஞ்சி இருந்தது. திருடனின் நேர்மையை எண்ணி அரசன் வியப்படைந்தான்.

அடுத்த நாள் காலை, அரசன் தன் மந்திரியை அழைத்தான். ‘‘எமது அரண்மனையில் திருடர் புகுந்தது போல் தெரிகிறது. சென்று பெட்டியைத் திறந்து பார்’’ என்று உத்தரவிட்டான். மந்திரி பெட்டியைத் திறந்தான். அதனுள் இருந்த ஓர் இரத்தினக்கல்லைத் தான் எடுத்து மறைத்துக் கொண்டான். அரசனிடம் வந்து, ‘‘விலையுயர்ந்த மூன்று இரத்தினங்களையும் காணவில்லை’’ என்றான்.

அரசன், மந்திரியை பணியிலிருந்து நீக்கினான். சத்தியத்தில் சிறந்த திருடனை அழைத்துவரச் செய்தான். அவனைத் தனக்கு மந்திரியாக்கிக் கொண்டான். திருடன், உண்மையின் உயர்வை உணர்ந்து கொண்டான். ஏனைய பாவகாரியங்களையும் கைவிட்டான். நேர்மையாகவும், சிறப்பாகவும் அரசனுக்குப் பணி செய்தான்.

## உண்மை உயர்வு தரும்

### பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்**

1. திருடனிடம் காணப்பட்ட தீய குணங்கள் இரண்டு தருக.

2. திருடன் தான் எதற்காக அரண்மனைக்கு வந்ததாக அரசனிடம் கூறினான்?

3. திருடன் மூன்று இரத்தினங்களையும் ஏன் எடுக்கவில்லை?

4. பெட்டியைத் திறந்து பார்த்த மந்திரி யாது செய்தான்?


5. திருடன் உண்மை பேசியதற்குக் கிடைத்த பரிசு யாது?

## செயற்பாடு

அரிச்சந்திரன் கதையைத் தேடிப் படிப்போம்.



# 21 ஒற்றுமையே பலம்



அன்று திங்கட்கிழமை, காலைப் பிரார்த்தனை முடிவடைந்தது. மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்றனர். ஆசிரியர் வந்தார். எல்லோரும் வணக்கம் கூறினர். ஆசிரியரும் கூறினார்.

ஆசிரியர், மாணவர்களை நோக்கி ‘‘பிள்ளைகளே! அடுத்த வாரம் நவராத்திரி வருகிறது. இம்முறை உங்களுக்கு ஒரு போட்டி உள்ளது.... கோலம் போடும் போட்டி’’ என்றார். மாணவர்கள் உற்சாகத்துடன் கைதட்டினார்கள்.

ஆசிரியர் மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தார். கலைமகள் குழுவிற்கு அமுதாவையும், அலைமகள் குழுவிற்கு பூரணியையும், மலைமகள் குழுவிற்கு ஆரணியையும் தலைவிகளாக நியமித்தார். ‘‘குழு அங்கத்தவர்கள் ஒற்றுமையாக, தலைவர்களுடன் சேர்ந்து செயற்பட வேண்டும்’’ என்று ஆசிரியர் அறிவுறுத்தினார்.

அலைமகள் குழுவைச் சேர்ந்த கவிதாவிற்கு பூரணி தலைவியானது பிடிக்கவில்லை. தனது குழுவிலுள்ள மாணவர்களிடம் சிறு சிறு பிரச்சினைகளை உண்டாக்கினாள். அலைமகள் குழுவின் ஒற்றுமை குலைந்தது.

அமுதாவும், பூரணியும், ஆரணியும் தத்தம் குழுவினரிடம் கொண்டு வரவேண்டிய பொருட்கள் எவை எனக் கூறினர். அனைத்து மாணவர்களும் உற்சாகமாக சம்மதித்தனர்.

கோலப் போட்டி நாள் வந்தது. ஆசிரியர் பாடசாலை மண்டபத்தைத் தயார் செய்திருந்தார். அமுதா குழுவினரும், ஆரணி குழுவினரும் மகிழ்ச்சியுடன் மண்டபத்தை நோக்கி ஓடிச் சென்றனர். ஆனால் பூரணியின் குழுவில் மூவர் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. கவிதாவும் அன்று பாடசாலைக்கு வரவில்லை. கவிதாவே கோலத்திற்கான நிறச்சாயம் கொண்டு வர வேண்டியவள். பூரணிக்கு அழுகை வந்தது.

ஆசிரியர் பூரணியை அழைத்து விசாரித்தார். பூரணி குழுவினர் நடந்ததைப் பற்றியும், கவிதாவைப் பற்றியும் ஆசிரியரிடம் கூறினர். ஆசிரியர் அவர்களைத் தேற்றினார். மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். அமுதாவையும், ஆரணியையும் அழைத்து விடயத்தைக் கூறினார்.

இருவரும் தத்தம் குழுவினர் கொண்டு வந்திருந்த நிறச்சாயங்களைப் பூரணிக்குப் பகிர்ந்து கொடுத்தனர். தத்தம் குழுவிலிருந்து ஒவ்வொரு மாணவரையும் பூரணி குழுவிற்கு

வழங்கினர். ஆசிரியர் ஆரணியையும், அமுதாவையும் பாராட்டினார். பூரணி அவர்களுக்கு நன்றி கூறினாள்.

கோலப் போட்டி மகிழ்ச்சியாக நடந்து முடிந்தது. ஆசிரியர் அனைவருக்கும் பரிசு கொடுத்தார். அடுத்த நாள் பாடசாலை வந்த கவிதா தன் பிழையை உணர்ந்தாள்; தன் குழுவினரிடமும் ஆசிரியரிடமும் மன்னிப்புக் கேட்டாள். ‘ஒற்றுமையே வெல்லும்’ என்பதை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு;**

**ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு.**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்**

1. எந்த விழாவை முன்னிட்டுப் போட்டி நடத்தப்பட்டது? கொண்டாடப்படவுள்ள விழா யாது?
2. மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டி யாது?
3. மூன்று குழுக்களும் எவை? அவற்றின் தலைவியர் யாவர்?
4. பூரணியின் குழுவிற்கு ஏற்பட்ட பிரச்சினை யாது?
5. பூரணிக்கு உதவி செய்தவர்கள் யாவர்?
6. இக் கதையிலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளும் படிப்பினை யாது?

## செயற்பாடு

பாடசாலையில் கோலம் போட்டுப் பழகுவோம்.

# 22 உலக நீதி

உலக நீதி, கொன்றை வேந்தன் போன்ற ஒரு நீதி நூல்; இனிய எளிய சொற்களால் எல்லோரும் உணர்ந்து பயன்பெறும் நீதிகளைக் கூறுவது. இதனைப் பாடியவர் உலகநாதன் என்னும் புலவர்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்

நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்

நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்

நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்

அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்

அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்

மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்

தனந்தேடி உண்ணாமற் புதைக்க வேண்டாம்

தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்

சினந்தேடி அல்லலையும் தேட வேண்டாம்

சினந்திருந்தார் வாசல்வழிச் சேறல் வேண்டாம்

## பயிற்சி

**உலக நீதிப் பாடலில் விரும்பிய 5 அடிகளை எழுதுவோம்.**

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

## செயற்பாடு

‘‘உலக நீதிப்’’ பாடல் அடிகளை மனனம் செய்து வகுப்பறையில் ஓதுவோம்.